### அரசியலமைப்புச் சட்டம் கூறும்

# அடிப்படைக் கடமைகளை நிறைவேற்றும் பொறுப்பு ஆட்சியில் இருப்போருக்கு உண்டு!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, மே 15-

முதலமைச்சரின் சிறப்பு அதிகாரியாக ஜோதிடர் நியமனமா? அரசியலமைப்புச் சட்டம் கூறும் அடிப்படைக் கடமையை நிறைவேற்றும் பொறுப்பு ஆட்சியில் இருப்போருக்கு அதிகம் அல்லவா? அறநிலையத் துறை முதன்மைச் செயலாளராகப் பார்ப்பனர் நியமனமா? அனைத்து ஜாதியினர் அர்ச்சகர் நியமன தொடர்பான பிரச்சினை என்னாவது? தமிழ்நாடு முதலமைச்சர் இந்த நியமனங்களைத் திரும் பப்பெற வேண்டும் என்று என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அரசு, தங்கள் விருப்பத்திற்கும், முன்னுரிமைக்கும் ஏற்ப அதிகாரிகளை இடம் மாற்றுவதும், அரசின் விதிகளுக்குட்பட்டு புதிய அதிகாரிகளை நியமிப்பதும் இயல்பு. அரசு அலுவலர்களாக இல்லாதோரையும் சிறப்பு அதிகாரிகளாக நியமிப்பது உண்டு. ஆனால், அண்மையில் பொறுப்பேற்றுள்ள முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் தலைமையிலான அரசு நேற்று முதலமைச்சரின் சிறப்பு அதிகாரியாக ரிக்கி ராதன் பண்டிட் வெற்றிவேல் என்று ஒருவரை நியமித்துள்ளது சரி



யான நடவடிக்கை அல்ல. அவரது நம்பிக்கைகள் அவரது உரிமை;

அவற்றுக்கு அரசில் என்ன வேலை?

அவர் முதலமைச்சர் அவர்களின் ‘ஆஸ்தான ஜோதிடர்’ என்று அறியப்படுபவர். ஜோதிடம், தியானம் என்றே தன்னை ஊடகங்களிலும், பொது வெளியிலும் அறிமுகப்படுத்திக் கொண்டவர். அப்படிப்பட்ட ஒரு ஜோதிடரை அரசின் செலவில் சிறப்பு அலுவலராக நியமித்துப் பக்கத்திலேயே வைத்துக் கொள்வது, இது மதச்சார்பற்ற அரசு என்பதற்கு ஏற்புடைய செயலல்ல... அரசியலமைப்புச் சட்டம் கூறும் அடிப்படைக் கடமைகளை நிறைவேற்றும் பொறுப்பு ஆட்சி மன்றத்தின் தலைமைக்கும் உண்டு கூடுதலாகவே உண்டு.

அறிவியலுக்குப் புறம்பான ஜோதிடத்தை அரியணையில் அமர்த்துவது விரும்பத்தக்கதல்ல!

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கூறு 51 ஏ (எச்) அறிவியல் மனப்பான்மையை வளர்ப்பதை அடிப்படைக் கடமையாக்குகிறது. ஆனால், அதற்கு மாறாக அறிவியலுக்குப் புறம்பான ஜோதிடத்தை மாநில முதலமைச்சரே முன்னிறுத்துவது சரியானதல்ல.

இந்த நியமனம் உடனடியாகத் திரும்பப் பெறப்பட வேண்டும். இனி இத்தகைய நடவடிக்கைகள் தொடரக் கூடாது.

இந்த நியமனத்துக்கு பல்வேறு கட்சித் தலைவர்களும் கண்டித்திருப்பதையும், கட்சிகளுக்கு அப்பாற் பட்டும் நேற்று முதலே சமூகச் சிந்தனையாளர்கள், பொதுமக்களின் கடும் கண்டனங்கள் எழுந்துள்ளதையும், சட்டமன்றத்திலேயே பல்வேறு கட்சியினரும் இதனைக் கண்டித்திருப்பதையும் வரவேற்கிறோம். தமிழ்நாடு பெரியார் மண் தான் என்பதை மீண்டும் நிரூபித்துள்ளன இந்த எதிர்ப்புகள்! இதனைப் புரிந்துகொண்டு செயலாற்றுவதே, புதிய அரசுக்கும், அதன் முதலமைச்சருக்கும் நல்லது.

மற்றொரு புறம், தந்தை பெரியாரால் தொடங்கப் பெற்று 50 ஆண்டுகளாக மக்கள் மன்றத்திலும், சட்டமன்றத்திலும், நீதி மன்றத்திலும் தொடர்ந்து போராடி வெற்றி பெற்று அனைத்து ஜாதியினர் அர்ச்சகர் சட்டத்தின்படி, பார்ப்பனரல்லாத அர்ச்சகர்கள் கடந்த 2021 ஆம் ஆண்டு சமூகநீதிக்கான சரித்திர நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான ‘திராவிட மாடல்’ அரசால் நியமிக்கப்பட்டனர்.

இந்து சமய அறநிலையத் துறைக்கு முதன்மைச் செயலாளராகப் பார்ப்பன அம்மையாரா?

இதன்மூலம் ஈராயிரம் ஆண்டு ஜாதி - தீண்டாமைக் கொடுமைக்கு முடிவு கட்டும் பணி நடந்தது. அதில் இன்னமும் கூட பல்வேறு தடைகள் இருக்கின்றன; நீதிமன்றத்தில் வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதன் அடுத்த கட்டங்களில் புதிய நியமனங்கள், அர்ச்சகர் பயிற்சிகள் தொடர வேண்டிய தேவை இருக்கிறது. இந்தச் சூழலில் இந்து சமய அறநிலையத் துறைக்கு முதன்மைச் செயலாளராகப் பார்ப்பன அம்மையார் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பது வேதனைக்குரியது.

இந்த நியமனம் திரும்பப் பெறப்பட வேண்டும். இதுவரையில் நாம் பெற்று வந்துள்ள வெற்றியையும், ஏற்பட்டுள்ள சமூக மாற்றத்தையும் எக் காரணம் கொண்டும் நாம் இழந்து விட முடியாது. மிக முக்கியமான கால கட்டத்தில் மிகுந்த கவனத்துடன் இப்பிரச்சினைகளை அணுக வேண்டும்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### எரிபொருள் சிக்கனத்தில் இரட்டை நிலைப்பாடு;

# பிரதமர் மோடியின் வேண்டுகோளை கண்டுகொள்ளாத பா.ஜ.க. நிர்வாகிகள்!

## அணிவகுத்த கார்களால் மக்கள் கடும் அவதி!

போபால், மே 15-

பிரதமரின் எரிபொருள் சிக்கன வேண்டுகோளை மீறி மத்தியப் பிரதேசத்தில் பாஜகவினர் 200 கார்களில் அணிவகுப்பு நடத்தியது பெரும் சர்ச்சையாகியுள்ளது. எரிசக்தி தட்டுப்பாடு மற்றும் நாட்டின் பொருளாதாரத்தை காக்க வேண்டி, பிரதமர் மோடி கடந்த 10ம் தேதியன்று நாட்டு மக்களுக்கு ஏழு முக்கிய கோரிக்கைகளை விடுத்திருந்தார். ஓராண்டுக்கு தங்கம் வாங்க கூடாது, ஒர்க் பிரம் ஹோம் பணி, பொது போக்குவரத்து பயன்பாடு, எரிபொருள் சிக்கனம் போன்றவற்றை வலியுறுத்தினார்.

மோடியின் கோரிக்கையை தொடர்ந்து அடுத்த 48 மணி நேரத்திற்குள், கடந்த 11ம் தேதியன்று மத்தியப் பிரதேச பாடநூல் கழகத்தின் புதிய தலைவராக நியமிக்க ப்பட்ட சவுபாக்யா சிங் தாக்கூர், உஜ்ஜைனியில் இருந்து போபாலுக்கு பதவி ஏற்கச் சென்றார். இதற்காக சுமார் 200க்கும் மேற்பட்ட சொகுசு கார்களில் அவரது ஆதரவாளர்கள் பிரம்மாண்ட அணிவகுப்பு நடத்தினர். இந்த அணிவகுப்பால் உஜ்ஜைனி போபால் நெடுஞ்சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. உச்சக் கட்ட வெயிலில் ஆம்புலன்ஸ்கள் மற்றும் பள்ளி பேருந்துகள் என பல வாகனங்கள் பல மணி நேரம் சாலையில் தேங்கி நின்றதால் பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாகினர்.

இதுகுறித்து வீடியோ வெளியிட்டுள்ள காங்கிரஸ் கட்சி, ‘ஒரு பக்கம் பொதுமக்களிடம் எரிபொருளை குறைக்கச் சொல்லும் பிரதமர், தனது கட்சி நிர்வாகிகள் ஆடம்பரத்திற்காக நூற்றுக்கணக்கான கார்களில் செல்வதை கண்டுகொள்வதில்லை; பாஜகவின் சிக்கன கோரிக்கை என்பது வெறும் பொதுமக்களுக்கு மட்டும்தானா?’ என்று கடுமையாக விமர்சித்துள்ளது. இதற்கு பதிலளித்த மாநில பாஜக தலைவர் ஹேமந்த் கண்டேல்வால், ‘பிரதமரின் வேண்டுகோள் தெளிவானது என்றாலும், நடத்தையில் மாற்றம் என்பது மருந்து வேலை செய்வது போல மெதுவாகத்தான் மாறும்’ என்று விளக்கம் அளித்தார். இதற்கிடையே, மற்றொரு பாஜக தலைவர் சத்யேந்திர பூஷன் சிங், இரிக்‌ஷாவில் அலுவலகம் வந்தாலும், அவருக்கு பின்னால் 40க்கும் மேற்பட்ட பெட்ரோல் மற்றும் டீசல் வாகனங்கள் அணிவகுத்து வந்ததைச் சுட்டிக்காட்டி சமூக வலைதளங்களில் பொது மக்கள் இந்தச் செயலை விமர்சித்து வருகின்றனர்.

### போர் பதற்றம் நீடித்தபடியே இருந்தால்

# இந்தியாவில் எரிபொருள் விலை உயர்வைத் தவிர்க்க முடியாது!

## இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் தகவல்!

டெல்லி, மே 15-

மத்திய கிழக்கில் நிலவி வரும் போர் பதற்றத்தின் விளைவாக, கச்சா எண்ணெய் விலைகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. இந்த சூழலில் இந்தியாவிலும் பெட்ரோல் மற்றும் டீசல் விலைகள் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

குறிப்பாக போர் பதற்றம் இன்னும் நீண்ட காலத்திற்கு நீடிக்குமானால் நம் நாட்டில் பெட்ரோல் மற்றும் டீசல் விலைகள் மேலும் அதிகரிக்க கூடும். இதனிடையே எரிபொருள் விலை உயர்வு பற்றி பேசி இருக்கும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநரான சஞ்சய் மல்ஹோத்ரா, உலகளவில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்துள்ளது. தற்போது இந்தியாவில் இந்த விலை உயர்வினால் ஏற்படும் கூடுதல் சுமையை அரசுக்குச் சொந்தமான எரிபொருள் விற்பனை நிறுவனங்கள் தாங்கிக்கொண்டு வருகின்றன.

ஆனால் இந்த சூழல் நீண்ட காலத்திற்கு நீடிக்குமேயானால், விலை உயர்வினால் ஏற்படும் சுமையின் ஒரு பகுதியை அரசாங்கம் தவிர்க்க முடியாமல் வேறு வழியின்றி நுகர்வோர் மீது சுமத்த வேண்டியிருக்கும் என்று குறிப்பிட்டார். ஏனெனில், அதிகரித்து வரும் கச்சா எண்ணெய் விலையானது பணவீக்கம், எரிபொருள் இறக்குமதி மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றின் மீது தொடர்ந்து அழுத்தத்தை ஏற்படுத்துகிறது என்று கூறி இருக்கிறார். தற்போதைய உலகளாவிய எரிசக்தி நெருக்கடி மேலும் மோசமடைந்தால், சில்லறை எரிபொருள் விலைகளை மாற்றாமலேயே வைத்திருக்க அரசால் முடியாமல் போகலாம் எனவும் கூறி இருக்கிறார்.

அந்நிய செலாவணி கையிருப்பை பாதுகாக்க எரிபொருள் நுகர்வைக் குறைக்க நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி வேண்டுகோள் விடுத்துள்ள நிலையில், சஞ்சய் மல்ஹோத்ராவின் இந்த கருத்து பொது மக்களிடையே எரிபொருள் விலையேற்றம் குறித்து கவலையை ஏற்படுத்தி இருக்கிறது.

### பூங்காநகர் உட்பட 13 ரயில் நிலையங்களில்

# 495 சிசிடிவி கேமராக்கள் நிறுவும் பணி தீவிரம்!

சென்னை, மே 15-

பயணிகள் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பை பலப்படுத்தும் வகையில், சென்னை ரயில்வே கோட்டத்தில் பூங்கா நகர், தண்டையார்பேட்டை, கொருக்குப்பேட்டை உட்பட 13 ரயில் நிலையங்களில் 495 சிசிடிவி கேமராக்கள் நிறுவும் பணி முழுவீச்சில் நடைபெறுகின்றன.

சென்னை ரயில்வே கோட்டத்தில் சென்னை கடற்கரை செங்கல்பட்டு, சென்னை சென்ட்ரல் அரக்கோணம் உட்பட பல்வேறு புறநகர் ரயில் வழித்தடங்களில் உள்ள ரயில் நிலையங்களில் சிசிடிவி கேமராக்களை நிறுவி, தீவிரமாக கண்காணிக்கப்படுகின்றன.

அந்த வகையில், கடந்த நிதியாண்டில் மட்டும், எண்ணூர், அத்திப்பட்டு, மீஞ்சூர், பொன்னேரி, கவரைப்பேட்டை, வில்லிவாக்கம், கொரட்டூர், திருமுல்லைவாயல், ஆவடி, பட்டாபிராம், நெமிலிச்சேரி, திருநின்றவூர், செவ்வாப்பேட்டை, புட்லூர், ஏகாட்டூர், கடம்பத்தூர், செஞ்சி பனம்பாக்கம், வண்ணாரப்பேட்டை, ராயபுரம் மற்றும் மணவூர் ஆகிய 26 ரயில் நிலையங்களில் 923 சிசிடிவி கேமராக்கள் செயல்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

அந்த இடங்களில் நிகழ்நேர கண்காணிப்புத் திறனை மேம்படுத்தி, பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக, 13 ரயில் நிலையங்களில் சிசிடிவி கேமராக்கள் நிறுவும் பணி முழுவீச்சில் நடைபெறுகின்றன.

இதுகுறித்து, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரிகள் கூறியதாவது: ரயில் நிலையங்களில் பயணிகள் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், பல்வேறு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இதன் ஒருபகுதியாக, பயணிகள் அதிகம் வந்து செல்லும் ரயில் நிலையங்களில் பாதுகாப்பை உறுதி செய்ய, சிசிடிவி கேமராக்கள் நிறுவி, தீவிரமாக கண்காணிக்கப்படுகிறது.

அந்தவகையில், பூங்கா நகர், தண்டையார்பேட்டை, கொருக்குப்பேட்டை, கத்திவாக்கம், வியாசர்பாடி ஜீவா, பெரம்பூர், பெரம்பூர் கேரேஜ் ஒர்க்ஸ், அம்பத்தூர், வேப்பம்பட்டு, மோசூர், புளியமங்கலம், திருத்தணி மற்றும் ஆம்பூர் உள்ளிட்ட 13 முக்கிய ரயில் நிலையங்களில் 495 சிசிடிவி கேமராக்களை நிறுவும் பணி தற்போது நடைபெறுகின்றன. இதன் மூலம் பயணிகள் மற்றும் செயல்பாட்டு மண்டலங்களில் கண்காணிப்பு மேலும் பலப்படுத்தப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் கடம்பத்தூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ஒன்றிய கழகச் செயலாளர் மோ.ரமேஷ், ஏற்பாட்டில் தலைமை செயற்குழு உறுப்பினரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன் கலந்துகொண்டு நீர் மோர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு குடிநீர், மோர், இளநீர், தர்பூசணி, கிருனி பழம், பனணுங்கு, குளிர்பானங்கள் ஆகியவற்றை வழங்கினார். உடன் ஒன்றிய நிர்வாகிகள் கோபால், ரவி, கீதா முனுசாமி, ஏகாம்பரம், சரத், டாக்டர் முரளி, ஆர்.மனோஜ், ராஜா, தட்சிணாமூர்த்தி, கருணாநிதி, மணிகண்டன், நீலாவதி ராஜேந்திரன், சீனிவாசன், கே.பி. எஸ்.கார்த்திக், தமிழ்மொழி, சதாசிவம், சரவணன், மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க. நகர் தெற்கு பகுதி கழகம் சார்பில் மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி கழக வேட்பாளர் வழக்கறிஞர் கே.எஸ். ரவிச்சந்திரன் வாக்களித்த வாக்காளர்களுக்கு 73, 73அ, 75, 75அ, 76, 76அ ஆகிய வட்டங்களில் நன்றி தெரிவித்தார். பகுதி கழக செயலாளர் எம்.சாமிகண்ணு, வட்ட கழக செயலாளர்கள் எம்.தமீம், பொல்லு, ஏ.டி.சுரேஷ்குமார், எஸ்.சசிகுமார், எஸ்.வெங்கடேசன், வி.கா.வெங்கடேசன், பா.பி.தாஸ், அ.கோவிந்தன், த.கருணாநிதி, அ.கருணாநிதி, இரா.வீரமணி, எம்.பெரோஸ் கான், க.ராஜ் முகமது, கனல்கங்கா, இரா.புருஷோத்தமன், எஸ்.பாபு, மெடிக்கல் கே.ஆர்.சதீஷ் மற்றும் கழக நிர்வாகிகள், பி.எல்.ஏ.2, கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

### ஆதித் தமிழர் பேரவை என்றென்றும்

# தி.மு.க.வின் உற்றத் துணையாக இருக்கும்!

## ஆதித் தமிழர் பேரவை செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, மே 15-

ஈரோட்டில், ஆதித் தமிழர் பேரவை நிறுவனர் தலைவர் இரா. அதியமான் தலைமையில் ஆதித்தமிழர் பேரவையின் சிறப்பு மாநில செயற்குழு கூட்டம் 11.05.2026 அன்று எழுச்சியுடன் நடைபெற்றது. இக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் கோவை.ரவிக்குமார், துணைப் பொதுச்செயலாளர்கள் ஏடிஆர்.சந்திரன்,தமிழரசு, மாநில அமைப்பு துணை செயலாளர் தோழர் மா.ஈழவேந்தன், மாநில மகளிர் அணி செயலாளர் தோழர் கெளசல்யா காந்தி மற்றும் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் கலந்துகொண்டனர். விளிம்புநிலை மக்களின் உரிமைகளை மீட்டெடுக்கவும், தமிழ்நாட்டின் தற்போதைய அரசியல் சூழலைச் சீர்தூக்கிப் பார்த்தும் பின்வரும் முக்கியத் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:



**தீர்மானம் 1:**

உச்சநீதிமன்றத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்ப்பின் அடிப்படையில், தமிழ்நாட்டில் பட்டியல் சமூக இட ஒதுக்கீட்டை முறையாக வகைப்படுத்த (Sub categorization) வேண்டும் எனப் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள விஜய் தலைமையிலான அரசை ஆதித்தமிழர் பேரவை வலியுறுத்துகிறது.

**தீர்மானம் 2:**

அருந்ததியர் உள்ளிட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டினை உறுதி செய்ய, அவர்களுக்கெனத் தனித்துவமான “சிறப்பு உட்கூறு திட்டத்தை” (Special Component Plan) இந்த அரசு முறையாகச் செயல்படுத்த வேண்டும்.

**தீர்மானம் 3:**

தமிழக வெற்றி கழகத் தலைவர் விஜய் முதலமைச்சர் பதவியேற்பு விழாவில், தமிழக மரபை மீறி, தமிழ்த்தாய் வாழ்த்தை மூன்றாவதாகப் பாடிப் புறக்கணித்ததை இந்தச் செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. இது தமிழ்நாட்டின் பண்பாட்டு மரபிற்கு எதிரானது.

**தீர்மானம் 4:**

திமுக கூட்டணியில் இருந்து கொண்டு, தற்போது தவெக அரசுக்கு ஆதரவு அளிக்கும் இடதுசாரி கட்சிகள் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நிலைப்பாடு ஒரு சந்தர்ப்பவாத அரசியலாகும். இது முற்போக்குக் கூட்டணியின் நம்பகத்தன்மையைக் குலைக்கும் என்பதால், இக்கட்சிகள் தங்கள் ஆதரவை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

**தீர்மானம் 5:**

திராவிட முன்னேற்றக் கழகம் என்பது ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக் கோட்டை. சமூக நீதிக் கொள்கைகளை அடித்தட்டு மக்கள் வரை கொண்டு சேர்த்த பெருமை திமுகவையே சாரும். நடந்து முடிந்த தேர்தலில் திமுக பின்னடைவைச் சந்தித்திருந்தாலும், ஆதித்தமிழர் பேரவை என்றும் திமுகவின் உற்றத்துணையாகவும், போர்வாளாகவும் களத்தில் நிற்கும்.எமது உறவு தேர்தல் சார்ந்தது அல்ல; கொள்கை ரீதியானது. அருந்ததியர் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திய ‘திராவிட மாடல்’ ஆட்சியை தந்த தளபதி முக.ஸ்டாலின் அவர்களுடன் ஆதித் தமிழர் பேரவை உறுதியுடன் துணை நிற்கும் சமூக நீதியைக் காக்க... தலைவர் தளபதி ஸ்டாலின் அவர்களின் கரங்களை வலுப்படுத்துவோம்! மீண்டும் திராவிடத்தின் குரல் ஓங்கி ஒலிக்கச் செய்திடத் தொடர்ந்து பணியாற்றுவோம் என இச்செயற்குழுவில் உறுதி ஏற்கப்பட்டது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



தாம்பரம் மாநகரம் – பெருங்களத்தூர் வடக்கு பகுதியில் கோடைக்காலத்தில் பொது மக்களின் தாகத்தை தணிக்கும் வகையில் வடக்கு பகுதி செயலாளர் டி.காமராஜ் ஏற்பாட்டில், தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா தண்ணீர் பந்தலை திறந்து வைத்து, நீர்மோர், பழரசம், இளநீர், குளிர்பானம், தர்பூசணி, பாதாம்மில்க், வெள்ளரிக்காய், ஆகியவற்றை பொதுமக்களுக்கு வழங்கினார். உடன் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, பகுதி செயலாளர் எஸ்.இந்திரன் மாநில மருத்துவ அணி துணை செயலாளர் டாக்டர் ஆர்.எஸ்.கிருத்திகாதேவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.